# பாதுகாப்பு விசாக்கள் மற்றும் மேல்முறையீடுகள் சட்ட சேவை

## நாங்கள் யார்

**Circle Green Community Legal என்பது பெர்த்தில் உள்ள இலாப நோக்கற்ற சமூக சட்ட மையமாகும். நாங்கள் மனிதாபிமானம், தங்குமிடம் மற்றும் பணியிடம் தொடர்பான சட்ட விவகாரங்களில் உதவுகிறோம். நாங்கள் மாநில அளவில் குடியேற்ற சட்ட சேவையில் நிபுணத்துவம் பெற்றவர்களாக திகழுகிறோம்.**

மனிதாபிமானக் குழுவானது மனிதாபிமான விசா வைத்திருப்பவர்கள், புகலிடம் கோருவோர், அகதிகள், குடும்ப வன்முறையை அனுபவிக்கும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் மற்றும் சட்ட சேவைகளை அணுக முடியாதவர்கள் உட்பட கலாச்சார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் வித்தியாசப்படும் (CaLD) பின்னணியில் இருந்து ஆஸ்திரேலியாவிற்குப் புதிதாக வருபவர்களுக்கு உதவுகிறது.



## நாங்கள் எப்படி உதவ முடியும்

**எங்கள் பாதுகாப்பு விசாக்கள் மற்றும் மேல்முறையீட்டு சட்ட சேவையானது ஆரம்ப பாதுகாப்பு விசா விண்ணப்பங்கள் மற்றும் நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் கூட்டாட்சி நீதிமன்றத்தில் செய்யப்படும் மேல்முறையீடுகள் குறித்த ஆலோசனை மற்றும் உதவியை வழங்குகிறது.**

பின்வருபவை தொடர்பான சட்ட ஆலோசனை மற்றும் உதவியினை நாங்கள் வழங்குகிறோம்:

- பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிப்பது. கடுமையான தீங்கு அல்லது துன்புறுத்தல் போன்ற ஆபத்து காரணமாக தாயகம் திரும்ப முடியாதவர்களுக்கு பாதுகாப்பு விசாக்கள் ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடத்தை வழங்குகின்றன.
- நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் கூட்டாட்சி நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் செய்வது.
- ஆரம்ப விண்ணப்பங்கள் மற்றும் வரவிருக்கும் கால வரம்புகள் பற்றிய ஒரு முறை ஆலோசனையையும் நாங்கள் வழங்குகிறோம்.

பிற தொடர்புடைய சட்ட மற்றும் ஆதரவு சேவைகளை நீங்கள் அணுகவும் நாங்கள் உதவுகிறோம்.



Circle Green Community Legal

# பாதுகாப்பு விசாக்கள் மற்றும் மேல்முறையீடுகள் சட்ட சேவை

## நாங்கள் யாருக்கெல்லாம் உதவ முடியும்?

- நீங்கள் ஆஸ்திரேலியாவில் விசாவில் இருந்து, உங்கள் சொந்த நாட்டிலிருந்து பாதுகாப்பைத் தேடுகிறீர்களா?
- கடலோரப் பாதுகாப்பிற்காக விண்ணப்பிக்க உங்களுக்கு உதவி தேவையா?
- பாதுகாப்பிற்காக நீங்கள் விண்ணப்பித்து, அது நிராகரிக்கப்பட்டு, மேல்முறையீடு செய்வதற்கு உங்களுக்கிருக்கும் விருப்பங்கள் குறித்து உங்களுக்கு ஆலோசனை தேவையா?
- நீங்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டுமா? நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தேதியில் ஆஜராக வேண்டுமா அல்லது விசாரணை உள்ளதா?
- நீங்கள் அறிவிப்புக் கடிதத்தைப் பெற்று, அதற்குப் பதிலளிப்பதற்கான கால வரம்பு உள்ளதா?
- நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது கூட்டாட்சி நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து பரிசீலிக்கிறீர்களா?





## எப்படி உதவிப் பெறுவது

இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றிற்கு நீங்கள் ஆம் என்று பதிலளித்திருந்தால், எங்கள் சேவையை(களை)ப் பெறுவதற்கு நீங்கள் தகுதிப் பெறலாம்.

எங்கள் சேவை உங்களுக்கு உதவியாக இருக்குமா என்பதை அறிய, எங்களைத் தொடர்பு கொள்க.

**எங்களின் அனைத்துச் சேவைகளும் இரகசியமானவை மற்றும் இலவசமானவை, தேவைக்கேற்ப மொழிபெயர்ப்பாளர்களை அணுகும் வசதியும் உள்ளது.**

## தொடர்புக்கு

(08) 6148 3636

humanitarian@circlegreen.org.au

Ground Floor, 445 Hay Street
Perth WA, 6000

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9:30 மணி - மாலை 4:40 மணி வரை

www.circlegreen.org.au/projects/protection-visa/

உங்கள் ஃபோன் கேமரா மூலம் என்னை ஸ்கேன் செய்க

Circle Green
Community Legal